# செப்டம்பர் 9 தூய கன்னி மரியாவின் பிறப்பு
# (ஆரோக்கிய அன்னை) விழா

## திருப்பலி முன்னுரை

அற்புதமான திருவிழா. அன்னையின் திருவிழா. அன்னைக்கு பிறந்த நாள் விழா.

கொண்டாட வந்துள்ள அனைவருக்கும் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

அன்னையின் நாமம் கொண்ட நல்உள்ளங்களுக்கும் திருவிழா நல்வாழ்த்துக்கள்.

பெண் சிசுக்களை பாதுகாப்போம் என்ற உறுதிப்பாட்டோடு விழாவை கொண்டாட அழைக்கப்படுகின்றோம்.

இந்த அழைப்பு காலத்தின் கட்டாயம். பெண்ணை பெற்றதால், பெண்ணை வெறுக்கும் சமுதாயம். அந்த பெண்ணால்தானே தாங்கள் பிறப்பெடுத்தோம் என்பதனை வெகுதிறமையாக மறந்து விடுகின்ற இந்த மனிதத்தை என்னவென்று சொல்லுவது.

கருவறையை கல்லறையாக்கி விட்டு, கருக்கலைப்பு செய்து விட்டு, வாழ வரும் சிசுவின் உரிமையை பறித்து கொண்டு, வயிற்றின் கனியை கொடையாக தரும், இறை பரிசை உதாசீனப்படுத்தி விட்டு, அன்னையே, தாயே, அம்மா, ஆரோக்கியத் தாயே, அடைக்கலம் தாரும்மாம்மா என்று அழைப்பதனால் யாரை ஏமாற்ற பார்க்கின்றோம்.

ஆணோ பெண்ணோ, பாகுபாடு வேறுபாடு இன்றி, இறைவன் தரும் பரிசையேற்று, வாழ வரும் சிசுவின் உரிமையை பேணி பெண்சிசுக்கள் வாழ வழிகாணுவோம். அதுவே ஆரோக்கியமான சமூகத்திற்கு உகந்தது.

அந்த ஆரோக்கிய அன்னையின் பிறப்பு எல்லாருக்கும் மீட்பு தர உதவியது போல, நம்முடைய பிறப்பின் வழி இறைவன் விரும்பும் திருவுளம் அறிந்து செயலாற்ற முன்வருவோம். பிறப்பை அர்த்தமுள்ளதாக்குவோம். அப்பொழுது நம் கொண்டாட்டங்கள் நிறைந்த மகிழ்வு தரும். நம்முடைய யாத்திரை, நம்முடைய நேர்ச்சைகள், நாம் செலுத்தும் காணிக்கைகள் மிகுந்த பலனையும், பயனையும் தரும்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

அன்னையின் மைந்தனே இறைவா! திருஅவை முன்னேடுக்கும் எல்ல நல்ல காரியங்களிலும், அன்னையின் வேண்டுகோளுக்கிணங்க 'அவர் சொல்லுவது போல' நீர் விரும்புவது போல செயலாற்ற அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அன்னையின் மைந்தனே இறைவா! அர்ப்பண அன்பர்கள் அதன் அர்த்தத்தின் முழுமையை உணர்ந்து, முழு மனித குல மீட்புக்காக அர்ப்பணித்து வாழ, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அன்னையின் மைந்தனே இறைவா! குடும்பத்தின், திருமணத்தின் மாண்பினை காத்து, எல்லா வியாகுலங்களிலும், பிரமாணிக்கம் தவறாது பயணிக்க, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அன்னையின் மைந்தனே இறைவா! பெண்மையை போற்றி மதித்து, பெண்சிசுக்களு; சமூகத்தில் வாழ உரிமை பெற்றவர்களே என்பதனை உணர்ந்து, கரு அழிப்பு, கலைப்பு செய்யாது நீh தரும் பரிசினை போற்றி பாதுகாத்திட, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அன்னையின் மைந்தனே இறைவா! பிறப்பு கொடை, பரிசு, செல்வம் என்பதனை உணர்ந்து அறிந்து, பிறப்பின் அர்த்தம் நிலைநாட்டப்பட, உமது திருவுளம் அறிந்து நடந்திட, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com